**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை - திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி, தரங்கம்பாடி
2024ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12 ம் நாள் திங்கட் கிழமை
திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம் ஆடி மாதம் 27 ம் நாள்
TNMY09-001689-2019

**OS.No. 232/2019**

செல்வேந்திரன் .....வாதி

//எதிர்//

1) சின்னதுரை

2) பஞ்சமூர்த்தி

3) மோகனசுந்தரம் ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 27.08.2018 அன்று O.S. No. 320/2018 என சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு பின்பு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 01.11.2019 அன்று O.S. No.232/2019 என கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து, 05.08.2024ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. E. செல்வராஜ் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. N. பாலாஜி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்தும் போதிய வாய்ப்பளித்தும் பிரதிவாதிகள் தரப்பில் வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் கடந்த 05.08.2024 அன்று பிரதிவாதிகளை தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்புரை**

தாவா வழக்கு சொத்துக்களை வாதி தனக்காகவும், தனது சகோதர சகோதரிகளுக்காகவும் தனது வசத்தில் வைத்து அமைதியான முறையில் சாகுபடி

செய்து அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, அல்லது அவரது ஆட்களோ, அல்லது அவரது ஏஜெண்டுகளோ, சட்டப்படிக்கின்றி எவ்விதத்திலும் எவ்வித இடைஞ்சலும், இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>வழக்குரையின் சுருக்கம்</u>:**

2. தாவா சொத்துக்கள் தரங்கம்பாடி தாலுக்கா மேலப்பெரும்பள்ளம் கிராமத்தில் அமைந்துள்ளது. வழக்கு சொத்துக்கள் பிராதில் 4 அயிட்டங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியின் தந்தை ரெத்தினசாமி படையாட்சி ஆவார். தாயார் ராமாமிர்தம் ஆவார். ரெத்தினசாமி படையாட்சி 2008ல் இறந்தார். ராமாமிர்தம் 2009ல் காலமாகிவிட்டார். மேற்படி தம்பதிகளுக்கு வாதியை சேர்த்து 3 மகன்களும், 3 மகள்களும் உள்ளனர். மேற்படி ரெத்தினசாமி மற்றும் ராமாமிர்தம் அம்மாளின் மூத்தமகன் சம்மந்தமூர்த்தி, 2 வது மகன் ராஜேந்திரன், 3 வது மகன் செல்வேந்திரன் (வாதி) மகள்கள் 1. கனகவள்ளி, 2. வசந்தா, 3. அஞ்சம்மாள் ஆவார்கள். கனகவள்ளி 2010ல் காலமாகிவிட்டார். ரெத்தினசாமி படையாட்சியின் சகோதரர் ராமு படையாட்சியின் மனைவி கோசலை அம்மாள் காலாமாகிவிட்டார். வாதியின் தந்தை ரெத்தினசாமி படையாட்சியின் சகோதரர்களான இந்த பிரதிவாதிகளின் தந்தை ராமு படையாட்சியும், மற்றொரு சகோதரருமான லெட்சுமணனும், சிவபிரகாசமும் காலமாகிவிட்டார்கள். மேற்படி ராமு மற்றும் ரெத்தினாசாமி குடும்பத்தில் 1974லிலேயே குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை ஏற்பட்டுள்ளது.

3. தாவா வழக்கு முதல் அயிட்ட சொத்தை பிரதிவாதிகளின் தந்தை ராமு படையாட்சி பெயரில் கிரயம் வாங்கப்பட்டது. மேற்படி சொத்தை ராமு படையாட்சி தனது மகளும் இந்த பிரதிவாதிகளின் சகோதரியின் திருமண செலவிற்காக 1975ஆம் வருடம் ரெத்தினசாமியிடம் வாய்மொழியாக போக்கியம் வைத்து ரூ.32,000/– கடனாக வாங்கி உள்ளார். அவர்கள் சகோதரர்களாக இருந்ததால் எந்த ஆவணமும் எழுதிக்கொள்ளவில்லை. மேற்படி போக்கிய தொகையில் வட்டிக்கு ஈடாக வழக்கு முதல் அயிட்ட சொத்தான 32 செண்ட் புஞ்சை நிலத்தை வாதியின் தந்தை

ரெத்தினசாமி அனுபவித்து கொள்ள வேண்டும் என்று வாய்மொழி போக்கிய ஒப்பந்தமாகும். மேற்படி போக்கிய தேதி முதல் 1வது அயிட்ட சொத்தை 1975 லேயே தன் வசம் எடுத்துக்கொண்டு அதில் மூங்கில் குத்துக்கள், தென்னை மரங்கள் பயிரிட்டு அனுபவித்து அதன் பலனை அடைந்து வந்தார். அதன்பிறகு அவருடைய மகனான வாதியும் மற்ற மகன்களும் மேற்படி முதல் அயிட்ட சொத்தை தங்கள் வசத்தில் வைத்து பொதுவில் அனுபவித்து வருகிறார்கள். மேற்படி முதல் அயிட்ட சொத்தை பொறுத்து அசல் கிரய பத்திரத்தை ராமு படையாட்சி போக்கியத்தை அனுசரித்து ரெத்தினசாமி படையாட்சியிடம் ஒப்படைத்துள்ளார்.

4. தாவா வழக்கு 2 வது அயிட்ட சொத்தும், தாவா வழக்கு 3 வது அயிட்ட சொத்தும் ராமு படையாட்சி பெயரில் 19.05.1969 மற்றும் 25.05.1969ல் இதில் சேராத ராமலிங்கத்திடமிருந்தும், சிவகாமியிடமிருந்தும் கிரயம் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு 2,3 அயிட்ட சொத்துக்களை ராமு படையாட்சி அவரது 3 வது மகன் இந்த பிரதிவாதிகளின் சகோதரி விஜயாவின் திருமண செலவிற்காக 1980 ஆம் வருடத்தில் குழி 1-க்கு ரூ.100/- வீதம் விலை பேசி ரூ.22,600/-ஐ ரெத்தினசாமி படையாட்சியிடம் பெற்றுக்கொண்டு வாய்மொழி கிரய சாசனம் மூலம் ஒப்படைத்துள்ளார். இதில் எவ்வித எழுத்துமூலமான கிரய சாசன ஆவணமும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. மேற்படி வாய்மொழி கிரய சாசன தேதி முதல் ரெத்தினசாமி படையாட்சியும் வாதியும் அவரது சகோதரர்களும் 2,3 அயிட்ட சொத்துக்களை தங்கள் வசம் எடுத்து நெல் பருத்தி முதலியவைகளை சாகுபடி செய்து அனுபவித்து வருகிறார்கள்.

5. தாவா வழக்கு 4 வது அயிட்ட சொத்து இறந்த ராமு படையாட்சிக்கு அவரது குடும்பத்தில் 20.10.1974ல் அவருக்கும் அவரது சகோதரருக்கும் ஏற்பட்ட பாகபிரிவினை சொத்து B அட்டவணை சொத்தாக கண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. அதனை சேர்ந்தாற்போல் வடப்புறம் வாதியின் தந்தை ரெத்தினசாமி படையாட்சிக்கு மேற்படி பாகப்பிரிவினை படி A அட்டவணை சொத்தின் ஒரு சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி புல எண்ணில் ராமு படையாட்சிக்கும், ரெத்தினசாமி படையாட்சிக்கும் சமபாகமாக ஆளுக்கு 33 செண்ட் ஒதுக்கப்பட்டு உள்ளது. மேற்படி ராமு படையாட்சி தனக்கு ஒதுக்கப்பட்ட 4வது அயிட்ட சொத்தை தனது சகோதரர் ரெத்தினசாமி படையாட்சியிடம் தன் குடும்ப கடன்களை தீர்க்க வேண்டி 1985ஆம் வருடத்தில் குழி 1க்கு ரூ.100 வீதம் கிரயம் பேசி 33 செண்ட் அல்லது 99 குழிக்கு ரூ.9,900/– பெற்றுக்கொண்டு வாய்மொழி கிரயமாக ரெத்தினாசாமி படையாட்சி வசம் விட்டு விட்டார். மேற்படி தாவா வழக்கு 4வது அயிட்ட சொத்தை தன் வசத்தில் எடுத்து மேற்படி சொத்துக்கு மேற்படி சர்வே நம்பரில் வடப்புறம் உள்ள 33 சென்ட்டுடன் ஒன்றாக சேர்த்து நெல், பருத்தி சாகுபடி செய்து அனுபவித்து வருகிறார். மேற்படி சொத்திற்கு மேற்கில் ரெத்தினசாமி படையாட்சிக்கு சொந்தமான பம்பு செட் மூலம் தண்ணீர் பாய்ச்சி சாகுபடி செய்து தாவா சொத்தை ரெத்தினசாமி படையாட்சியும் அவருக்கு பிறகு வாதியும் மற்ற மகன்களும் தங்களது வசத்தில் வைத்து பொதுவில் அனுபவித்து வருகிறார்கள்.

6. தாவா வழக்கு 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களுக்கு மேற்படி ரெத்தினசாமி தனது பெயரிலும் தனது மகன்கள் பெயரிலும் கிஸ்தி செலுத்தி வருகிறார். நிலஉடமை பதிவு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தாவா வழக்கு 4 வது அயிட்ட சொத்திற்கு ரெத்தினசாமி படையாட்சி பெயரில் 33 சென்ட்டுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. 4 அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் தங்கள் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்வதை அறிந்த ரெத்தினசாமி படையாட்சி 18.12.2004ல் பட்டா மாற்றம் செய்யக்கூடாது என்று தரங்கம்பாடி வட்டாட்சியர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு அறிவிப்பு அனுப்பி உள்ளார். தாவா வழக்கு 1வது அயிட்ட சொத்து வாய்மொழி போக்கியத்தின் அடிப்படையிலும், 2 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் வாய்மொழி கிரய சாசனத்தின் அடிப்படையிலும் வசத்தில் வைத்து ரெத்தினாசாமி படையாட்சியும் அவருக்கு பிறகு அவருடைய மகனான வாதியும் அவரது சகோதர சகோதரிகளும் முழு உரிமையாளர் என்ற முறையில் தங்களது வசத்தில் வைத்து அனுபவித்து வருகிறார்கள்.

7. மேற்படி ராமு படையாட்சியின் முதல் வருட நினைவு அஞ்சலியின்போது நடந்த கசப்பான அனுபவத்தை மனதில் கொண்டு இந்த வாதிடமும் அவரது சகோதர சகோதரிகளிடமும் பணம் பறிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பிரதிவாதிகளும் அவரது தாயாருடன் சேர்ந்துக்கொண்டு சமூகம் நீதிமன்றத்தில் 06.12.2004 ல் இந்த வாதி, அவரது சகோதரர்கள், மற்றும் தாய் தந்தை மீது அசல் வழக்கு எண். 343/2004 என்ற வழக்கை சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து 26.11.2008ல் தள்ளுபடி செய்துள்ளது. மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் பிரதிவாதிகள் மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு எண். AS.No.02/2009 ஐ தாக்கல் செய்து 06.09.2009ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8. இந்நிலையில் பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்து ஜனவரி 2017ல் தாவா சொத்தில் உள்ள நெற்பயிர்களை பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கைப்பற்ற முயன்றதால் வாதி அதனை தடை செய்ய 31.01.2017ல் பூம்புகார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அவர்கள் நடவடிக்கை எடுக்காததால் 10.04.2017ல் நாகப்பட்டினம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்துள்ளார். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சீர்காழி காவல்துறை கண்காணிப்பாளார் அவர்களுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கும்படி கூறியதால் மேற்படி புகாரை விசாரித்த காவல்துறை துணை கண்காணிப்பாளர் பிரதிவாதிகளை வரவழைத்து விசாரணை செய்து எச்சரித்து உள்ளனர். இதனால் ஆத்திரம் கொண்ட பிரதிவாதிகள் மீண்டும் பொய்யான ஆவணங்கள் அடிப்படையில் தாவா சொத்தில் 01.08.2018 அன்று மீண்டும் அத்துமீறி புகுந்து தாவா சொத்துக்களை கைப்பற்ற முயன்றனர். வாதி அதனை தடுத்துவிட்டார். பிரதிவாதிகள் மீண்டும் தாவா வழக்கு சொத்துக்களை வாதியிடமிருந்து கைப்பற்றப்போவதாக சூளுரைத்து சென்றுள்ளார்கள். பிரதிவாதிகள் ஆள்பலமும், பணபலமும், அரசியல் செல்வாக்கும் மிக்கவர்கள். எனவே, வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

9. இவ்வழக்கு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலை நிற்கத்தக்கதல்ல. வாதி பிரதிவாதிகளின் உறவு முறை சரியே. வாதியின் தகப்பனாருக்கும் பிரதிவாதிகளின் தகப்பனாருக்கும் இடையே 1974ல் பாகப்பிரிவினை நடைபெற்றது என்பது உண்மையே. தாவா 2, 3 அயிட்ட சொத்துக்கள் இந்த பிரதிவாதிகளின் தகப்பனார் ராமு படையாட்சியால் கிரயம் பெறப்பட்டதும் உண்மையே. ஆனால் ராமு படையாட்சியிடமிருந்து 2,3 அயிட்ட சொத்துக்களை வாதியின் தகப்பனார் வாய்மொழி கிரயமாக பெற்றதாக தெரிவித்துள்ளது முற்றிலும் பொய். தாவா 1 வது அயிட்ட சொத்தினை 1975 ஆம் வருடம் ராமு படையாட்சியிடம் ரூ.32,000/- கொடுத்து ரெத்தினசாமி போக்கியத்திற்கு பெற்றதாக சொல்வது பொய். 1 வது அயிட்ட சொத்தின் சந்தை மதிப்பு அன்றைய நிலையில் அவ்வளவு தொகைக்கு மதிப்புடையதல்ல. தாவா சொத்துக்கள் எதுவும் வழக்கு தேதிக்கு முன்போ, அசல் வழக்கு எண்.320/2018 தாக்கல் செய்த தேதியிலோ வாதியின் வசத்திலோ அனுபவத்திலோ இல்லை. தாவா 2 வது அயிட்ட சொத்து புல எண்.216/3. 0.43 செண்ட் நிலங்களும் இந்த பிரதிவாதியால் என்.எஸ்.எல். நாகபட்டிணம் இன்பெரா ஸ்ட்ரெக்சர் லிமிடெட்டுக்கு கிரயம் செய்யப்பட்டு தற்போது அவர்களது வசத்திலும் அனுபவத்திலும் உள்ளது. பட்டாவும் அவர்களின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

10. மேலும் இந்த வழக்கிடை சொத்துக்கள் இந்த பிரதிவாதிகளின் வசத்திலும் அனுபவத்திலும் இருக்கும் நிலையில் வாதியே தாவா சொத்துக்களை இந்த பிரதிவாதிகள் அபகரித்துக்கொண்டுள்ளதாக கண்டு நாகப்பட்டிணம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் அளித்து அதன் பேரில் C.No.67/18/ALGSC/NGT/2018 dt 08.03.2018ல் அழைப்பாணை அனுப்பிவிட்டு 06.04.2018ல் இந்த பிரதிவாதிகள் விசாரணை செய்யப்பட்டு இந்த பிரதிவாதிகளின் வசம் சொத்துக்கள் உள்ளதை உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னரே வாதி பொய்யான தகவல்களை தெரிவித்து அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். தற்போது தாவா சொத்துக்களில் புல எண்.111/2, 113/13ல் உள்ள சொத்தில் பிரதிவாதி ADT 13 ரக

நெல்லும், மரவல்லி கிழங்கும் பயிரிட்டுள்ள நிலையில் அதற்கான அரசு சலுகைகள் பயிர் காப்பீடு, வங்கி கடன் தொகைகள் பெற கிராம நிர்வாக அலுவலரை இந்த பிரதிவாதிகள் அணுகிய நிலையில் கிராம நிர்வாக அதிகாரி வாதிக்கு நெருக்கமானவர் என்ற நிலையிலும் அவருக்கும் ஒரு அறிவிப்பு கொடுத்து எந்த அரசு உதவி வணிக விவசாய கடனும் இந்த பிரதிவாதி பெற முடியாத வகையில் வாதி தடுத்துவிட்டார். இருந்தும் இந்த பிரதிவாதிகளுக்கு தொடர்ச்சியாக இடையூறு கொடுத்து எப்படியாவது தாவா சொத்துக்களை ஆக்கிரமித்து அபகரித்துவிட எத்தனித்து மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்து இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பெற்று அதிலும் இந்த பிரதிவாதிகளை தாவா சொத்திலிருந்து அப்புறப்படுத்த முயற்சித்து முடியாத நிலையில் காவல் துறை உதவி வேண்டி சமூகம் நீதிமன்றத்தில் மனுவும் தனியே தாக்கல் செய்துள்ளார். வாதி தாவா தேதிக்கு முன் அதாவது 08.03.2018 தேதிக்கு முன்பிருந்தே தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லாத நிலையிலும் தாவா சொத்து இந்த பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு சொந்தமான நிலையிலும் அசல் வழக்கில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல. வாதி தூய கரங்களுடன் நீதிமன்றத்தினை நாடவில்லை. எனவே, இவ்வழக்கினை கூடுதல் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என கூறியுள்ளார்கள்.

11. வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்ததில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

**1) தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளதா ?**

**2) வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைத்தக்கதா?**

**3) தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

12. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்கு போதிய வாய்ப்பளித்தும் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால் பிரதிவாதிகள் கடந்த 05.8.2024 அன்று தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

**<u>எழுவினா 1 மற்றும் 2 :</u>**

13. வாதி தரப்பில் தாவா சொத்துக்களானது பிரதிவாதிகளின் தந்தை ராமு படையாட்சிக்கு பாத்தியப்பட்டது என்றும், ராமு படையாட்சியின் சகோதரர்தான் வாதியின் தந்தை ரெத்தினசாமி படையாட்சி என்றும், ராமு படையாட்சி தனது மகளின் திருமண செலவிற்காக தாவா 1வது அயிட்ட சொத்தை வாய்மொழி போக்கியமாக தனது சகோதரர் ரெத்தினசாமி படையாட்சியிடம் 1975 ஆம் வருடம் வைத்து ரூ.32,000/– கடன் பெற்றதாகவும், தாவா 2 மற்றும் 3 வது அயிட்ட சொத்தை ராமு படையாட்சி தனது 3 வது மகள் திருமணத்திற்காக 1980ஆம் வருடத்தில் ரூ.22,600/க்கு கிரயம் பேசி ரெத்தினசாமி படையாட்சியிடம் கிரயத்தொகையை பெற்றுக்கொண்டு வாய்மொழி கிரயமாக ஒப்படைத்து விட்டதாகவும், 4 வது அயிட்ட சொத்தை ராமு படையாட்சி தன் குடும்ப கடன்களை தீர்க்க வேண்டி ரூ.9,900/க்கு கிரயம் பேசி 1985 ஆம் வருடம் ரெத்தினசாமி படையாட்சியிடம் கிரயத்தொகையை பெற்றுக்கொண்டு வாய்மொழி கிரயமாக ஒப்படைத்துவிட்டதாகவும், அன்று முதல் தாவா சொத்துக்களை ரெத்தினசாமி படையாட்சி அனுபவித்து வந்ததாகவும், அவர் காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகளான வாதியும், அவரது சகோதரர்களும் பொதுவில் வைத்து அனுபவித்து வந்தார்கள் என்றும், ரெத்தினசாமி படையாட்சி இறந்தபிறகு பிரதிவாதிகள் அவரது தாயாருடன் சேர்ந்துகொண்டு வாதி மற்றும் சகோதர, சகோதரியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு 343/2004 என்ற வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும் மற்றும் இதர பரிகாரங்களுக்காகவும் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் பிரதிவாதிகள்

மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் A.S.No.2/2009 என்ற வழக்கு தாக்கல் செய்து அந்த மேல் முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக வாதி மற்றும் அவரது சகோதர, சகோதரிகள் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றும், கடந்த 01.8.2018 அன்று பிரதிவாதிகள் பொய்யான ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தை மீண்டும் ஆக்கிரமிக்க முயற்சி செய்ததால் வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் வாதி தனது தரப்பு வழக்கை தனது சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துவிட்டதாக கூறப்பட்டுள்ளது.

14. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளின் தகப்பனார் ராமு படையாட்சிக்கு பாத்தியப்பட்டது என கூறப்பட்டுள்ளது. ராமு படையாட்சி பெயரில் உள்ள தாவா சொத்துக்களுக்கான கிரய ஆவணங்கள் வா.சா.ஆ.1, வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது பிரதிவாதிகளின் தகப்பனார் ராமு படையாட்சிக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியவருகிறது. தாவா 4 வது அயிட்ட சொத்துக்கான பட்டா வாதியின் தகப்பனார் ரெத்தினசாமி படையாட்சி பெயரில் உள்ளது. தாவா சொத்துக்களானது ராமு படையாட்சிக்கு பாத்தியப்பட்டதாக உள்ள நிலையில் அதன் அனுபவமானது வாதிகள் வசம் உள்ளதாக வாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. அதை நிரூபிக்கும் முகமாக வாதிகள் தரப்பில் 21.02.1989 முதல் 29.03.2008 வரையிலான தேதிகளில் தாவா சொத்துக்களுக்கு வாதியின் தகப்பனார் செலுத்தியுள்ள வாய்தா ரசீதுகள் (எண்ணிக்கை 7 ) வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 29.05.1993ல் வாதி பெயரில் கொடுத்த கரும்பு ஆலையில் கொடுத்த விருப்ப கடிதம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி நாகப்பட்டிணம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு 30.01.2017ம் தேதியில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் இடையூறு செய்வது குறித்து கொடுக்கப்பட்ட புகார் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 343/2004ல்

பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த தீர்ப்பை எதிர்த்து மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட A.S.No.2/2009ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது இந்த வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றும், பிரதிவாதிகளின் அனுபவத்தில் இல்லை என்றும் கூறி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே, மேற்படி தீர்ப்புகளின் அடிப்படையில் தாவா சொத்துக்களானது வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதிகள் தாவா சொத்தை வாதியிடமிருந்து வசப்பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்து வசம் எடுத்ததாகவோ அல்லது வேறு எந்த முறையிலும் தனது அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருவதாகவோ நிரூபிக்கவில்லை. எனவே, வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள வழக்கை வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதன் மூலமாகவோ, அல்லது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவோ மறுத்து அவரது தரப்பை கூறவேண்டியது பிரதிவாதிகளின் கடமை. ஆனால் பிரதிவாதிகள் தனது தரப்பு வழக்கை நிரூபிக்கத்தவறிவிட்டார்கள். எனவே, வாதிகோரிய பரிகாரம் வாதிக்கு அளித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**<u>எழுவினா 3:</u>**

16. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கப்பெற்றதால் வேறு எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என இந்நீதிமன்றம் மேற்படி எழுவினாவிற்கு முடிவு காணப்படுகிறது.

17. முடிவாக, தாவா வழக்கு சொத்துக்களை வாதி தனக்காகவும், தனது சகோதர சகோதரிகளுக்காகவும் தனது வசத்தில் வைத்து அமைதியான முறையில் சாகுபடி செய்து அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, அல்லது அவரது ஆட்களோ, அல்லது அவரது ஏஜெண்டுகளோ, சட்டப்படிக்கின்றி எவ்விதத்திலும் எவ்வித இடைஞ்சலும், இடையூறும் செய்யக்கூடாது என வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு அளித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 12.08.2024 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

(ஒப்பம்) P. கனிமொழி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

<u>பின் இணைப்பு:-</u>

<u>வாதி தரப்பு சாட்சிகள்:-</u>

வா.சா.1. செல்வேந்திரன் ( வாதி)

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>

| | |
|---|---|
| வா.சா.ஆ1 | 08.06.1966ஆம் தேதியிட்ட தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து பிரதிவாதிகளின் தகப்பனார் பெயரில் ஏற்பட்ட கிரய சாசனத்தின் அசல் |
| வா.சா.ஆ2 | தாவா 4 வது அயிட்ட சொத்திற்கு வாதியின் தகப்பனார் ரெத்தினசாமி பெயரில் உள்ள பட்டாவின் அசல் |
| வா.சா.ஆ3 | 19.05.1969 தேதியிட்ட 2 வது அயிட்ட சொத்தை பிரதிவாதிகளின் தகப்பனார் ராமு படையாட்சி கிரயம் பெற்ற கிரய சாசனத்தின் அசல் |
| வா.சா.ஆ4 | 25.05.1969 தேதியிட்ட 3 வது அயிட்ட சொத்தை ராமு படையாட்சி கிரய பெற்ற கிரய சாசனத்தின் அசல் |

| | |
|---|---|
| வா.சா.ஆ5 | 21.02.1989 முதல் 29.03.2008 வரையிலான தேதிகளில் தாவா சொத்துக்களுக்கு செலுத்தப்பட்ட வாய்தா ரசீது ( எண்ணிக்கை 7) |
| வா.சா.ஆ6 | 29.05.1993 தேதியில் வாதி பெயரில் கரும்பு ஆலையில் கொடுத்த விருப்ப கடிதத்தின் அசல் |
| வா.சா.ஆ7 | 18.12.2004 தேதியில் வாதி தாசில்தாரருக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ8 | வாதி நாகப்பட்டினம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகாரின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ9 | சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.343/2004 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ10 | சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.343/2004 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ11 | மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண். 2/2009ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ12 | மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண். 2/2009ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:-** இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-** இல்லை

(ஒப்பம்) P. கனிமொழி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

// உண்மைநகல் //

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.